பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 07 2024 **SUNDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசுடன், மாநில அரசுகள் ஒன்றிணைந்து செயல்பட்டால் வளர்ச்சி பெற்ற இந்தியாவை உருவாக்கும் முயற்சி வெற்றிபெறும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், இன்று அமெரிக்க அமைச்சர் திரு ஆன்டனி பிளிங்கனை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தினார்.

3. கர்நாடகத்தில் ஆளும் காங்கிரஸ் கட்சி, மாநிலத்திற்கான நிதி ஒதுக்கீடு குறித்து தவறான தகவல்களை மக்களுக்கு தெரிவிப்பதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் குற்றம் சாட்டியுள்ளார்.

4. காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து இன்று தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

5. பாரிஸ் ஒலிம்பிக்கில் இந்தியாவிற்கு இன்று முதல் பதக்கம் கிடைத்துள்ளது. மகளிர் துப்பாக்கிச்சுடுதலில் மனு பாக்கர் வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>

மத்திய அரசுடன் மாநில அரசுகள் ஒன்றிணைந்து செயல்பட்டால், மக்கள் நலனை உறுதி செய்வதோடு, வளர்ச்சி பெற்ற இந்தியாவை உருவாக்கும் முயற்சியும் வெற்றி பெறும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற பிஜேபி ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் மாநாட்டில் நிறைவுரையாற்றிய பிரதமர், நாட்டின் மதிப்புமிக்க பாரம்பரியத்தை காப்பதில நாட்டின் வளர்ச்சி உள்ளடங்கியிருப்பதாக கூறினார்.

நாட்டின் பெருமையை உலக அரங்கில் உயர்த்தவும், மக்கள் நலனுக்காகவும், வளர்ச்சிக்காகவும் முழு ஈடுபாட்டுடன் செயல்படவும் மாநில அரசுகள் உத்வேகத்துடன் செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி, முதலமைச்சர்களை கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, மத்திய அமைச்சர்கள், திரு ராஜ்நாத் சிங், திரு அமித் ஷா மற்றும் கட்சியின் மூத்த தலைவர்கள் கலந்துகொண்டனர்.

பிஜேபி ஆளும் 13 மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் துணை முதலமைச்சர்களும் இந்த இரண்டு நாள் மாநாட்டில் பங்குபெற்றனர்.

<<<<<<>>>>>

அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள சராயுதேவு மைதாம், யுனஸ்கோவின் புராதன சின்னங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில், மக்களோடு மனம் திறந்து பேசும் மன் கி பாத் 112-ஆவது நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், இந்திய புராதன சின்னங்களின் பட்டியலில் 43-ஆவது இடத்தையும், பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் முதலாவது இடத்தையும் சராயுதேவு மைதாம் பெற்றிருப்பதாக குறிப்பிட்டார்.

வளர்ந்துவரும் ஓவியக்கலைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், பொது கலையை மக்களிடம் கொண்டு சேர்க்கும் **'Public Art of India** என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பிரதமர், வளர்ந்துவரும் ஓவியக் கலைஞர்களின் கலை படைப்புகளை மக்கள் பார்வைக்கு வைப்பதற்கு இந்த திட்டம் வழிவகுத்துள்ளதாக கூறினார்.

தேசிய கைத்தறி தினம் அடுத்த மாதம் 7-ஆம் தேதி கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டிய பிரதமர் திரு நரேந்திர மோடி, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள கைத்தறி கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டும் என்றும், கைத்தறி ஆடைகளை அனைவரும் பயன்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவிட வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

புலிகள் பாதுகாப்பிற்காக இதுவரை இல்லாத அளவிற்கு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டிருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

நாட்டின் கலாச்சாரத்தோடு புலிகள் ஒன்றியிருப்பதாக தெரிவித்த பிரதமர், வனப்பகுதிகளில் உள்ள கிராமங்களில் வசிப்போர் புலிகளுக்கும், தங்களுக்கும் பாதிப்பு ஏதும் இல்லாமல் வாழும் முறையை தெரிந்து வைத்திருப்பதாக கூறினார்.

ராஜஸ்தான், மகாராஷ்ட்ரா, ஆந்திரப்பிரதேசம், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் பழங்குடியின மக்கள் புலிகள் உள்ளிட்ட வன விலங்களுக்கு பாதிப்பு ஏதும் இல்லாமல் இயற்கையோடு இணைந்து வாழ்ந்து வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

புலிகள் பாதுகாப்பில் பொதுமக்களின் பங்கு அதிகரித்து வருவது குறித்து பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

சுதந்திர தினம் அடுத்த மாதம் 15ஆம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி, இல்லந்தோறும் மூவர்ணக்கொடி இயக்கத்தில் அனைவரும் உற்சாகமாக பங்கேற்க வேண்டும் என்று திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

பிரதமர் ஆற்றிய உரையின் முழு தமிழாக்கம் இரவு 8 மணிக்கு சென்னை அகில இந்திய வானொலியில் மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>

இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நாளை நடைபெறுகிறது.

இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அங்கு சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் இன்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஆன்டனி பிளிங்கனை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தினார்.

இந்த பேச்சுக்கள் நிலையானதாகவும், ஆக்கப்பூர்வமானதாகவும் அமைந்ததாக இந்த சந்திப்புக்குபின் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

நாளை தொடங்கும் குவாட் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்கப்படும் என்றும், இதனை ஆவலோடு எதிர்நோக்கி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

கர்நாடகத்தில் ஆளும் காங்கிரஸ் அரசும், எதிர்க்கட்சிகளும், மாநிலத்திற்கான நிதி ஒதுக்கீடு குறித்து தவறான தகவல்களை பரப்பி வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஐக்கிய முற்போக்கு கூட்டணி மத்தியில் ஆட்சியில் இருந்தபோது கர்நாடகாவிற்கு ஒதுக்கிய நிதியைவிட, தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மாநிலத்தில் உள்ள உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கும், ரயில்வேத் திட்டங்களுக்கும் கடந்த பத்தாண்டுகளில் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும் அவர் பட்டியலிட்டார்.

மாநிலத்தின் ரயில்வேத்துறைக்கு மட்டும் அதிகபட்சமாக 7 ஆயிரத்து 559 கோடி ரூபாய் தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கர்நாடக மாநிலத்தில் பிஜேபி ஆட்சியில் இருந்தபோது பின்பற்றப்பட்டு வந்த பொருளாதார கொள்கைகள் காரணமாக கடந்த இரண்டாண்டுகளில் கூடுதல் வருவாய் கிடைத்ததாகவும், மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தபின் வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

மாநிலத்தில் ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக மத்திய அரசு ஒதுக்கிய நிதி, முறையாக பயன்படுத்தப்படவில்லை என்றும் அவற்றை வேறு திட்டங்களுக்கு மாநில அரசு பயன்படுத்தியதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>

காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து முதற்கட்டமாக வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இன்று காலை சென்னையில் மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் ஆய்வு மேற்கொண்ட தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், காவிரி தண்ணீரை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்தவும், ஏரி குளங்களில் சேமித்து வைப்பதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

விவசாய சங்கப் பிரதிநிதிகளுடன் சிறப்பு ஆலோசனைக்கூட்டங்களை நடத்தி, காவிரி தண்ணீரை சேமித்து வைத்து பயன்படுத்துவதற்கான அறிவுரைகளை வழங்க வேண்டும் என்று அவர் கூறினார்.

கர்நாடக அணைகளிலிருந்து அதிக அளவு தண்ணீர் திறந்துவிடப்படுவதால், மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து சென்று தங்கவைப்பதற்கான நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் செய்து தர வேண்டும் என்றும் முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு இன்று முதல் பதக்கம் கிடைத்துள்ளது.

மகளிர் துப்பாக்கிச்சுடுதல் பத்து மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் மனு பாக்கர் வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்

பதக்கம் வென்ற மனு பாக்கருக்கு குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பாரிஸ் ஒலிம்பிக்கில் முதல் பதக்கத்தை பெற்றுத்தந்த மனு பாக்கர், நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், மனுபாக்கரின் வெற்றி இளம் வீராங்கனைகளுக்கு உந்து சக்தியாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், மனுபாக்கர் பெற்றுள்ள இந்த வெற்றி இந்தியாவுக்கு கிடைத்துள்ள வரலாற்று சிறப்புமிக்க அங்கீகாரம் என்று கூறியுள்ளார்.

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச் சுடும் போட்டியின் மகளிர் 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்தியாவின் **Ramita Jindal** இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவிலும் இந்தியாவின் **'Arjun Babuta** இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

டேபிள் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் ஸ்ரீஜா அகுலா அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து, மாலத்தீவின் **Fathimath** –ஐ 21-9, 21-6 என்ற நேர் செட்டுகளில் வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் துடுப்பு படகு போட்டியில் இந்தியாவின் **Balraj Panwar** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-------------

ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி - டிவென்டி கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா தோல்வியடைந்தது.

தம்புலாவில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் களமிறங்கிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 165 ரன் எடுத்தது.

166 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இலங்கை அணி, 18 புள்ளி நான்கு ஓவரில், 2 விக்கெட் இழப்பிற்கு, 167 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

**<<<<<<END>>>>>**